## உறுப்பியல் (1) முதனினைப்புக் காரிகை

**கந்தமுந் தேனூர் சுருக்கமுங் காதற் குறில் குறிலே**
**தந்தன வீரசை தேமாவுந் தண்குன்றத் தன்றிருவுங்**
**கொந்தவிழ் கோதாய் குறடிரை வெள்ளை யறவெழுவாய்**
**அந்தமு மாவு மிருசீரு மோனையு மாமுறுப்பே.**

---

(1) இஃது உறுப்பியலில் ஆசிரியர் கூறிய காரிகைகளின் முதனினைப்புக் காரிகை. இஃது அடிவரவென்றும் வழங்கப்படும். இதனை இயற்றியவர் எவர் என்பது விளங்கவில்லை, முதனினைப்பை உணர்த்தும் செய்யுள் பிரதிதோறும் வேறுபட்டிருக்கிறது. அவ்வேறுபாடு வருமாறு :

### கலித்துறை

'கந்தமுந் தேனூர் சுருக்கங் குறினெடி லாங்குறிலே
தந்தன வீரசை தேமாந்தண் குன்றந்தண் சீரதிரும்
அந்தண் குறடிரை வெள்ளைக் கறத்தெழு வாயொடந்த
முந்திய மாவிரு மோனை யிருப துறுப்பியலே.'

### அடிவர வாசிரியம்

'கந்தந் தேனூர் சுருக்கங் குறினெடில்
குறிலே யீரசை தேமாந் தண்ணிழல்
குன்றந் தண்சீர் திருமழை குறளிரு
திரைத்த வெள்ளை யறத்தா றெழுவாய்
அந்த மாவு மிருசீர் மோனை
என்றிவை [1]யிருபது முறுப்பிய லாகும்.'